பக்கங்கள் :- 6

விலை ரூபா 10.00

சங்கமம்
SANGAMAM

[கூட்டுறவுக் குரல் Voice Of Co.op]

''அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு''

ஆறு 1 | திருவள்ளுவர் ஆண்டு 2028 | ஏப்ரல் 1998 | அருவி 8

# மாபெரும் மேதினப் பேரெழுச்சி!

## ஊர்வலம் ஊர்தி பவனி உரையரங்கு

## கூட்டுறவுக் கொடியுடன் கூட்டுறவாளர் பெருமுழக்கம்

மேதினப் பேரெழுச்சியை உணர்வுபூர்வமாக கொண்டாட கூட்டுறவு அமைப்புகள் பலவும் தயாராகி வருகின்றன தொழிலாளர் வர்க்கத்தின் அவலத்தை உலகுக்கு உணர்த்தும் இந்நாளில் கூட்டுறவுப் பணியாளர்களும் தொழிலாளர்களும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகள் பலவற்றை ஏற்பாடு செய்து வருகின்றனர் ஊர்வலம் ஊர்தி அலங்காரம், உரையரங்கு என்பனவும் இடம்பெற்றுள்ளது தெருக்கடியின் மத்தியில் இடப்பெயர்வு அவலத்தை ஏற்று தமது தொழில்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் வென்று வாழும் உறுதி எடுத்துக் கொண்ட எமது மக்களின் ஒரு அங்கமாக கூட்டுறவுத் தொழிலாளர்களும் இவ் ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். கிளிநொச்சி முல்லை மாவட்டங்களில் இவ் ஏற்பாடுகளை கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஒழுங்குபடுத்துவுள்ளதாக ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர் இறுதிநிகழ்வுகள் புதுக்குடியிருப்பிலும் அக்கராயனிலும் நடைபெறவுள்ளதாக தெரியவருகிறது.

# வன்னி பெருநிலப் பரப்பு முழுவதுக்குமான

# மாபெரும் விவசாயக் கண்காட்சி!

## விவசாய விரிவாக்க திணைக்கள ஏற்பாட்டில் கூட்டுறவு அமைப்புகளும், அரச அரசுசாரா நிறுவனங்களும் காட்சியறைகள் அமைப்பு

கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்க திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாய விரிவாக்க கண்காட்சியொன்றை மேமாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு பெரியளவிலான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன விவசாய அபிவிருத்தி, கால்நடை அபிவிருத்தி, வீட்டுத் தோட்டச் செய்கை, கனிமரங்கள் உற்பத்தி, காடு வளர்ப்பு, பனை சார் உற்பத்தி மூலிகை தோட்ட அபிவிருத்தி தெங்கு அபிவிருத்தி தேனீ வளர்ப்பு முயல் வளர்ப்பு, நீர் முகாமைத்துவம், உள்கட்டுமான அபிவிருத்தி என்பன தொடர்பில் பல்வேறு அம்சங்களையும் காட்சிப்படுத்தும் விசேட அறைகளில் பல்வேறு நிறுவனங்களினது கூட்டு முயற்சியில் காட்சியறைகள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது கிளி ஸ்கந்தபுரம் இல 1 பாடசாலை, புனித திரேசா பெண்கள் கல்லூரி, பரந்தன் இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாடசாலை வளாகம் இவ் காட்சியறைகளுக்காக பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகளில் பெருமளவிலான கூட்டுறவு அமைப்புகள் பங்குபற்றி தமது உற்பத்திகளை பிரபலப்படுத்தவுள்ளன: பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மூலிகை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், விவசாயிகள் கூட்டுறவு அமைப்புக்களான, திருவையாறு, முழங்காவில் விவசாய கூட்டுறவுச் சங்கங்களும் காட்சி நிலையங்களை திறப்பதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளன இதனை விட பனை அபிவிருத்திச் சபை நீர்ப்பாசன திணைக்களம். கால்நடை சேவைத்திணைக்களம் சித்த ஆயுள்வேத வைத்திய சேவைகள் இணையம், அரசுசாரா நிறுவன இணையம் அரசுசாரா நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் ஆகியனவும் இவ் முயற்சியில் விசேட அரங்குகளை ஏற்பாடு செய்துள்ளன.

வன்னி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான மாணவர்களும் விவசாயிகளும் பொது மக்களும் இக் காட்சியமைப்பில் கலந்து பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது! கல்வி விரிவாக்க நிகழ்ச்சி திட்டங்களுடன் அரங்க நிகழ்ச்சிகளாக பட்டிமன்றம், கவியரங்கு, மாணவருக்கான வினாடிவினா போட்டிகளும் விவசாய அறிவுப் போட்டியும் இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகிறது இது தொடர்பில் போதிய ஒத்துழைப்பை சகல நிறுவன தலைவர்களும் வழங்கி கண்காட்சி சிறப்புற ஒத்துழைக்க வேண்டுமென கண்காட்சி ஏற்பாட்டாளரான கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. க சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடப்பெயர்வு நிகழ்ந்த பின்னர் பெருநிலப்பரப்பில் பெரியளவிலான விவசாய கண்காட்சி ஒழுங்கு செய்யப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது

## கிளி. மாவட்டத்தில் பொதி சுமப்பவர் சங்கம்


கிளிநொச்சி மாவட்டத்தில் பொதிசுமப்பவர் சங்கம் ஒன்று கடந்த 16 03. 98 அன்று உருவாக்கப்பட்டுள்ளது. தலைவராக திரு. ம. யோசெப் இவர் கரைச்சி தெற்குப் ப. நோ. கூ சங்கத்தை சேர்ந்தவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளர் திரு. க. செல்வராசா பூநகரி ப. நோ. கூ. சங்கம், பொருளாளர் திரு வே. குமார் கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம் உப தலைவர் திரு. அ. செல்வராசா அளவெட்டி - மல்லாகப் ப. நோ. கூ. சங்கம் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கூட்டுறவு மருந்தகங்கள்

யாழ்ப்பாணத்தில் இப்போது பல ப நோ. கூ. சங்கங்கள் கூட்டுறவு மருந்தகங்களை ஆரம்பித்து மலிவான விலையில் மருந்துப் பொருட்கள், பால்மா வகைகள் என்பவற்றை தற்போது மக்களுக்கு வழங்கி வருகின்றன. என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சீரற்று இயங்கும் பற்சிகிச்சை நிலையம்!

மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம் சீராக இயங்குவதில்லை எனவும் அதனை ஒழுங்காக செயற்படுத்த கல்வி திணைக்கள நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது ஸ்கந்தபுரம் இல 1 பாடசாலையில் அமைந்திருக்கும் இச் சிகிச்சை நிலையம் பாடசாலை மாணவர்களின் பற் சுகாதாரத்துக்கு பொறுப்பானது என்பதால் அதனை சீராக்கவேண்டுமென சுகாதாரக் குழு உறுப்பினர்களின் ஒன்றுகூடலில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது



## செவ்வியாறு

இம்முறை செவ்வியாற்றில் கிளிநொச்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் மாவட்ட பனை தென்னைவள இணையத்தின் தலைவருமான திரு. மாயழகு அவர்களின் தரிசனம் 3ஆம் பக்கத்தில் இடம் பெறுகிறது.

வெளியீட்டுக்கான ஆதரவு: கிளிநொச்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

## பஞ்ச தந்திரக் கதைகள்

### - சேர்க்கை தோஷம் -

ஒரு மலைப்பகுதியில் கிளிகள் பல வாழ்ந்து வந்தன. ஒரு சமயம் ஒரு பெண்கிளி முட்டைகளை இட்டது அவற்றில் இருந்து இரண்டு கிளிகள் வெளிவந்தன. தாய்க்கிளி தம் குஞ்சுகளுக்கு இரையைக் கொண்டு வந்தூட்டி விடும் ஒரு சமயம் தாய்க்கிளி வெளியே சென்றிருந்த போது வேடன் ஒருவன் அங்கு வந்து இரண்டு கிளிக் குஞ்சுகளையும் எடுத்துச் சென்று விட்டான் வழியில் ஒரு கிளிக்குஞ்சு எப்படியோ தப்பித்துக்கொண்டு பறந்து சென்றது. அதை ஒரு முனிவர் கண்டெடுத்து தன் ஆச்சிரமத்திலே வளர்த்து வந்தார். இவ்வாறு ஒரு கிளி வேடனிடத்திலும், ஒரு கிளி முனிவரிடத்திலும் வளர்ந்து வந்தது

சிறிது காலத்திற்குப்பின் ஓர் அரசன் வேட்டைக்காக தன் சேனையுடன் காட்டுக்குச் சென்றான் செல்லும் வேளை வழி தவறி சென்றான் வழியில் வேடன் இருக்கும் இடம் சமீபமாக வந்தது அப்போ கூண்டில் இருந்த கிளி வேடனிடம் ''யாரோ ஒருவன் குதிரையின் மேல் வருகிறான். அவனைப் பிடித்துக் கட்டிப் போட்டுக் கொன்றுவிடு'' என்றது.

அதைக் கேட்டு அரசன் தன் குதிரையை வேறுபக்கமாக திருப்பி வேகமாக சென்றான். வழியில் முனிவரின் ஆச்சிரமம் தென்பட்டது. அங்கே கூண்டில் இருந்த கிளி ''அரசே வருக வருக! தாங்கள் சிறிது நேரம் இளைப்பாறி விட்டுச் செல்லலாம்'' என்று அழைத்தது. பின் முனிவரிடம் ''அரசனுக்குரிய உபசரணைகளைச் செய்யுங்கள்'' என்று கூறியது.

இதைக்கேட்ட அரசன் வியந்து முன்பு பார்த்த கிளி முரட்டுத்தனமாகவும் இப்போ பார்க்கும் கிளி மாறுபாடாகவும் இருப்பதை எண்ணி கிளியிடமே கேட்டான் அந்தக்கிளி தன் கடந்த கால சம்பவங்களைக்கூறி ''நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் பிறந்தவராக இருந்தும் வெவ்வேறு இடத்தில் வளர்ந்ததால் எங்களின் குணமும் வெவ்வேறாக இருக்கிறது என கூறியது. இதிலிருந்து ஒவ்வொருவரின் குணமும், செய்கையும் அவரவர்கள் சேர்ந்திருக்கும் இடத்தைப் பொறுத்ததே என்று அரசன் புரிந்துகொண்டான்.

## கரைச்சி கிழக்கில் மாணவப் பயிலரங்கு

''இளம் உள்ளங்களின் அறிவுப்பரப்புக்குள் கூட்டுறவுக் கருத்துக்கள் பகிரப்படுவது மிக விரும்பத்தக்க செயல்முயற்சி. இதில் பூரண பங்காற்றலை வழங்கிவரும் கரைச்சி கிழக்கு சங்கம் பாராட்டுக்குரியது'' என கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைக்குட்பட்ட உயர்தர சாதாரணதர மாணவர்களைக் கொண்ட இராமநாதபுரம் ம.வி, வட்டக்கச்சி ம. மாணவர்களுக்கான கல்விக்கருத்தரங்கில் உரையாற்றிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் திரு. சொ. சு. சிறில் குறிப்பிட்டார்,

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் மாவட்டக் கூட்டுறவுச்சபை விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன, இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு. இரத்தினகுமார், வட்டக்கச்சி மகா வித்தியாலய அதிபர் ஐ.செல்வராசா கரைச்சிகிழக்கு பொது முகாமையாளர் இ. புவனேஸ்வரன் ஆகியோரது உரைகளைத்தொடர்ந்து கல்வி அலுவலகர் திரு சதிஸ்குமாரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## மொழிகள் பற்றி

உலகில் மொத்தம் 2800 மொழிகள் இருக்கின்றன அதில் 750 மொழிகள் பப்புவா நியூகினி தீவிலேயே விழங்குகின்றன நாட்டின் அளவுக்கும் அதில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கைக்கும் சம்மந்தமில்லை. மொழியானது! மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பின்றி சிறிய சிறிய குழுக்களாக வாழும்போது கனிப்பட்ட மொழிகள் பிறக்கின்றன

நவம் சாம்ஸ்கி என்கின்ற மொழி இயல் ஆராய்ச்சியாளர் உலகில் உள்ள மொழிகள் அனைத்துக்கும் ஒரு பொதுவான சூழ்நிலை அமைப்பு இருப்பதாகச் சொன்னார் இதற்குக் காரணம் ஒரு குழந்தை புதிய மொழியைக் கற்கும் வேகம் தான் மூன்று வருடத்திற்கு ஒரு முழு மொழியை கற்றுக்கொள்ளும் போது அதன் மூளையில் பதிந்திருக்கு ஆதார அமைப்பைத் தான் பயன் படுத்துகிறது என அவர் சொன்னார் சாம்ஸ்கி கோட்பாடு நவீன மொழியியல் ஆராய்ச்சியை இன்று வரை பாதித்துக் கொண்டிருக்கிறது.

(ம.ஜெ)

## கூட்டுறவுச் சபையில் புதிய பயிற்சி நெறி!

கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவு கற்கைகளுக்கான கனிஸ்ட தராதரப்பத்திர பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் சங்க பணியாளர் மட்டத்தில் கோரப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. க. சிவகுமார் சங்கமத்துக்கு தெரிவித்தார்.

50 பயிற்சியாளர்களைக் கொண்ட இப்பயிற்சி நெறியில் அதிக எண்ணிக்கையானோரை சங்க முகாமையினர் அனுப்ப முயற்சிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

பெருமளவிலான தகைமைக் குறைவுடைய நீண்டகாலப் பணியாளர்கள் பதவி உயர்விலும் சம்பளப்படி நிலை தாண்டலிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையமாக கொண்டு எமது மாவட்டத்தில் முதல் தடவையாக இப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதுடன் விற்பனையாளர் தரப்பயிற்சி நெறியும் நடாத்தப்படாத நிலையில் இப் பயிற்சியினை சங்க முகாமையினர் தமது இடைநிலை தரப் பணியாளர்களின் நலனைக் கருதி அவர்களை விடுவித்து தமது சந்தர்ப்பத்தை பயன்படுத்துவது அவசியமென செயலாளர் கருத்து தெரிவித்தார்.

## விவசாயஅபிவிருத்திக்கென உர வாரியம்

விவசாய உள்ளீடுகளினது தேவையை ஒருமுகப்படுத்தும் நோக்கில் சிறந்த உள்ளீட்டு விநியோகக் கொள்கை ஒன்றைவெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வன்னிப் பெரும்பரப்பை மையமாகக் கொண்ட உரவாரியம் ஒன்றை அமைப்பது பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளதாக விவசாயக்குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடபில் கமநல சேவை திணைக்களம் கூட்டுறவு அமைப்புக்கள் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியன கூட்டு மூலதனம் ஒன்றைத் திரட்ட திட்டமொன்றை ஆராய கலந்துரையாடியுள்ளனர்

எனினும் உணவுப்பொருட்கள் விநியோகத்தில் பெருமளவு மூலதனத்தை ஈடுபடுத்தியுள்ள கூட்டுறவு அமைப்புக்கள் உடனடியாக இத்திட்டத்தில் மூலதனமிட முடியாது இருக்குமென சங்க வட்டாரங்கள் தெரிவித்ததுடன் உணவு நெருக்கடியினை எதிர்கொள்வது தமது முதன்மையான நோக்கமெனவும் அவை மேலும் தெரிவித்துள்ளன.

## OOOOOOOOOOO கவிதை வெளி OOOOOO OOOOOO

### இனி வருங்காலம் எமக்கானது

விடியலை ஏன்
மறந்தீர்கள்?
மரண வீட்டில் தெரிந்த
மஞ்சள், சிவப்பு நிறத்துண்டை
கூட்டுறவாளரே! ஏன்மறந்தீர்கள்?

மஞ்சள் சிவப்பு நிறம்
தோய்ந்த கோல உடை
அணிந்து
வடம் பிடித்து இழுத்த
காலத்தை ஒரு
தசாப்தத்தை - ஏன்
மறந்தீர்கள்?

திசை மாறி பறக்கின்றீர்கள்- அன்று
அந்நியர் தந்த
ஆள்குறி அட்டையையும்
அடி உறுதிக் கட்டுடனும்
அவலம் சுமந்த துயரோடு
கிளாலியைக் கடக்கையிலே
கால நேரம் பார்த்து
சிம்மாசனம் ஏறிய
உங்களுக்கு
மன்னிப்பே கிடையாது

ஜே. பி பட்டத்தை அலங்கரித்து
கொடுத்து வைத்தவர்கள்
சந்தை வரி அறவிட வந்த
பிரதேச சபைத் தலைவருக்கும்
வாய்க்கால் வெட்ட வந்த
நகரசபைத் தலைவருக்கும் - தன்
ஆள் தொகுதியை நிரப்ப வந்த
ஆயுட்காலச் சங்கத்
தலைவருக்கும் தப்பி போகக்
கடல் கூட இடம் தராது
இனி - வருங்காலம்
எமக்கானது!

-கானகன்-

### கசக்கும் உண்மைகள்

வனத்தில் இருந்து புறப்பட்ட
அடங்காத நதியொன்று,
சினத்துச் செல்கின்ற
பாதையின் மருங்கில்
ஓர் சோலை
சோபித்துக் கிடந்தது.

கொஞ்சம் கொஞ்சமாய்
சோலையின்
சுற்றுப் பிரதேசத்தை
நீர் பற்றிப் பிடித்தது.

மண்படைகள்,
மரங்களின் வேர் காக்க
போர் செய்து
அவையும் அரிக்கப்பட்டன.
அகதிகளாய்.

அருகிருந்த சிறிய
மரங்களை,
காவு கொண்டு
சாவு ஊர்வலம் நடத்திற்று
அந்த நீர்ப்பரப்பு,

கடைசியாய், பாறிவிழுந்த
ஒரு பெருமரம்
நீர்ப்பாதையின் குறுக்காய்
நீண்டு கிடந்தது.

வெள்ளம்
தேங்கி, நுரைத்து, திசைமாறி
பாதாளத்தின் பாறையொன்றில்
மோதிக்கொண்டது.

ஒரு நீர்த்தொடர்,
சிறுசிறு துகள்களாக
வலுவிழந்து சிதறிப்போன
கண்ணுக்கு இனிமையாய்து

### தாயும் தாயக மண்ணும்

தாயும் தாயக மண்ணும்,
ஒன்றுதான்-
கிட்ட இருக்கும் போது
தெரிவதில்லை
எட்டிப் போனபின்னால்
என்றும் ஏக்கமே

கண்ணில்
முட்ட நீர் வந்தால்
துடைத்திடுவாள் அன்னை
காலில் மிதிபட்ட
தாயக மண்
கனவில் வரும்போது
கண்ணீர் வருகிறது

என் மண்ணில்
ஒரு பிடி அனுப்புங்கள்
தலையணையுள் வைத்து,
உறங்குதற்கு-

சிவாஞ்சலி
கனடா

### சி. க. கூ

வறுமையின் நிருட்டு
வாழ்வுக்கு வழியில்லை
பலரின் கூட்டுறவில்
சிறுதுளிகளாய்
சேமித்தோம்-
கடன் கிடைத்தது.
மாடு வாங்கினேன்-
பால் விற்று
கடன் அடைக்கிறது
மாடு-
இதுவும் நாடுயரும்
கூட்டுறவே-

தர்சிகா-

### "போஸ்ட்" வந்த விதம்

ஆரம்ப காலங்களில் தபால்களைக் குதிரைகளின் மூலம் தான் கொண்டுசென்று செய்திகளைப் பரிமாறிக் கொண்டனராம். இவ்வாறு குதிரைகளில் செல்வோர் ஓரிடத்தில் தங்கி நின்று உணவருந்தி இளைப்பாறிய பின் குதிரைகளை மாற்றிக் கொண்டு பயணத்தைத் தொடருவார்களாம். அவ்வாறு அவர்கள் இளைப்பாறிய இடத்திற்குப் ''போஸ்ட்'' எனப்பெயர். இப்பெயரே பின்னர் ''போஸ்ட் ஆபீஸ்'', ''போஸ்ட் பொக்ஸ்'' என வழங்கலாயிற்றாம்.

### ★ பூர்ண ஆயுசுக்கு வயது 120 -

நித்திய கண்டம் பூர்ண ஆயுசு என்று சொல்கின்றோம் அல்லவா? இதில் பூர்ண ஆயுசு என்பது 120 வருடங்கள் வாழ்வதைக் குறிக்குமாம்.

தொகுப்பு:-
பனையவன்
யாழ்.பல நோ கூ. சங்கம்,
ஸ்கந்தபுரம்.

# தொழிற்படுபரப்பு இழப்புஎன்பது தான் எமது பெரிய பிரச்சினையாக உள்ளது

**- ப. தெ. வ. அ. கூ. சங்க சமாச தலைவர் -**

வன்னிப் பெருநிலப்பரப்பின் கூட்டுறவு வளர்ச்சியில் கருத்துப் பலம் சேர்க்கும் சங்கமத்தின் செவ்வியாற்றில் கூட்டுறவாளரின் அனுபவ தரிசனம் இடம்பெறுவது வழமையாகும். இவ்வகையில் இம் முறை கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள இணையத்தினதும் கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினதும் தலைவரான திரு பாயழகு அவர்களுடனான நேர்முகம் இடம்பெறுகிறது. இந்தியாவின் இராமநாதபுரம் மாவட்டத்தின் கள்ளல கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது 16ஆவது வயதில் யாழ்ப்பாணம் வந்து 1957 இல் இருந்து கிளிநொச்சி 5ஆம் வாய்க்கால பகுதியில் நிரந்தரமாக வசித்து வருகிறார். 5 ஆண் பிள்ளைகளைக்கொண்ட இவரது இரு மகன்களும் பனம் தொழிலில் ஈடுபடுகின்றனர் சாதாரண அங்கத்தவனாக செயல்பட்டு அதன் தலைமைத்துவத்துக்கு தெரிவான இவரது அனுபவங்களை தாங்கி இம்முறை செவ்வியாறு ஊற்றெடுத்துள்ளது.

**கேள்வி** - தங்களுக்கும் இத்தொழிலுக்குமான உறவு பற்றி சிறிது சொல்லுங்கள்?

நாங்கள் பரம்பரையாக இத் தொழிலில் ஈடுபட்டுள்ளோம். 16 வயதில் இருந்தே நான் இத் தொழிலைச் செய்யத்தொடங்கி விட்டேன். 1970ஆம் ஆண்டுவரை கரடிப் போக்குப் பகுதியில் சொந்தமாக கள் விற்பனை நிலையம் ஒன்றை அமைத்து அதில் விற்பனையும் செய்து வந்தேன். 1972இல் முதல் முதலில் கிளிநொச்சியில் ஓர் கள் விற்பனைச் சங்கம் தொடங்கிய போது அப்போதைய தலைவரான திரு.மாசிலாமணி அவர்களின் வழிகாட்டலில் நானும் ஒரு அங்கத்தவனானேன். எனக்கு 50ஆவது அங்கத்தவ இலக்கம் வழங்கப்பட்டது அன்றிலிருந்து இன்றுவரை நான் ஒரு அங்கத்தவனாக இருந்து வருகின்றேன்.

- கூட்டுறவு நிர்வாக ஈடுபாடு எப்போதிருந்து தொடங்கியது?

எமது கூட்டுறவுச் சங்க அமைப்பு தொடங்கிய 1972ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கிளைக்குழு உறுப்பினராக இருந்து வருகிறேன். மூன்றுமுறை பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளேன். இரு வருடங்களாக உப தலைவராகவும் இருந்து இப்போது சங்கத் தலைவராகவும் சமாசத் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளேன்.

- இடப் பெயர்வால் பெரிதும் பாதிக்கப்பட்ட சங்கங்களில் பிரதானமான அமைப்பான தங்களின் அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை?

பெருமளவு தென்னை பனையுடைய பிரதேசம் இடப்பெயர்வால் கைவிடப்பட்டது. எமது அங்கத்தவரை பெரிதும் பாதித்துள்ளது. இதனைவிட வடிசாலை உற்பத்தியான மதுசாரம் மிகையாகத் தேங்கி விற்பனை அற்றிருப்பது அடுத்த பெரும் நெருக்கடியாகும். இதனைவிட இப்போது வருமானம் குறைவு காரணமாக உற்பத்தி பொருட்களும் விற்பனை செய்யமுடியாததால் தொழில்களையே கட்டுப்படுத்தியுள்ளோம்.

- இடம் பெயர்ந்த தொழிலாளருக்காக தங்கள் சங்கம் என்ன நடவடிக்கைகளை செய்திருக்கிறது?

இடம் பெயர்ந்தோர் மீண்டும் தொழில்களை ஆரம்பிக்க 2000 ரூபா முற்பணம் எல்லா அங்கத்தவருக்கும் வழங்கப்பட்டதுடன் கட்டாய சேமத்தில் அரைவாசியினை கடனாக வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேவையான மரங்களை இடம்பெயர்ந்த பகுதியில் பெற்றுக்கொடுத்து அவர்களை தொழிலோடு செயல்பட ஊக்குவித்துள்ளது ஆனைவிழுந்தானில் வடிசாலை மீளவும் அமைக்கப்பட்டு உற்பத்தி நடைபெறுகிறது.

- தொழிற்பரப்பு இழப்பு தங்களின் சங்கத்தை எப்படியெல்லாம் பாதித்தது?

இதுதான் எமது பெரிய பிரச்சினை 3 கிளைகள் சொந்தப்பட்ட பகுதியில்தான் நாம் இப்போது 36 கிளைகளை செயற்படுத்தியுள்ளோம். கூடியவிலையில் மரங்களைப் பெற்றே தொழில் செய்யவேண்டியுள்ளது.

- ஏற்கெனவே யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த தொழிலாளர்களை உங்கள் சங்கம் எப்படி பராமரிக்கிறது?

யாழில் இருந்து 500 அங்கத்தவர்கள் வரை எமது சங்கத்தில் தற்பேதும் அங்கத்தவராக உள்ளனர். இவர்களுக்கு சங்கம் பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

- கல்வி வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பு பற்றி கூறமுடியுமா?

எமது அங்கத்தவரது பிள்ளை ஒன்று பல்கலைக்கழகம் சென்றால் அவருக்கு 12,000 ஆயிரம் படிப்புச்செலவு கொடுக்கின்றோம். பன்னைவேலைப் பயிற்சித்திட்டத்தை பாடசாலை செல்வோருக்கு செயற்படுத்துகின்றோம். கிளைக்குழு மட்டத்தில் கல்வி வேலைத்திட்டமும் நடைமுறைப்படுத்துகின்றோம்.

- நடத்தை கட்டுப்பாட்டுடன் செயற்படும் அங்கத்தவர்களை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

எமது சங்கத்தில் 1400 வரையான அங்கத்தவர்கள் செயல்படுகின்றனர்; இதில் 300 பேர் வரை A வகுப்பினராகும். 700 பேர் B வகுப்பை சார்ந்தவர்கள் 400 வரையானோர் C வகுப்பினைக் கொண்டவர்கள்.

- அங்கத்தவர்களின் பிணக்குகளை எப்படி தீர்த்துக் கொள்கிறீர்கள்?

அங்கத்தவர் மத்தியில் கல்வி அலுவலர் மேற்பார்வையாளர் மூலம் விசாரணைகளை மேற்கொள்கிறோம். சிறுவகை குற்றங்கள் இதன்மூலமே தீர்க்கப்படும். எனினும் சட்டங்களாக எப்போதும் எமது நடவடிக்கையை கட்டுப்படுத்த முடியாது. மனமாற்றம் மட்டுமே நம்மை ஒற்றுமைப்படுத்தும்.

- தென்னை தொழில் வல்லுனராக பெருமளவு காலம் செயற்பட்ட தங்கள் அங்கத்தவரின் தற்போதைய நிலை மாறியுள்ளதா?

தென்னை நெருக்கடி காரணமாக பெருமளவானோர் பனை மீதும் தொழில் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டனர். அது பழக்கத்துக்கு வந்துவிட்டது.

- தங்கள் சங்கப் பணியாளர்கள் சேர்ப்பு பற்றி என்ன கூறுகிறீர்கள்.

எமது சங்கம் ஓய்வு பெற்ற பணியாளர்கள் அங்கத்தவரின் பிள்ளைகளில் தகுதியுடையோருக்கு முன்னுரிமை வழங்குகிறது. தகுதியில்லையெனில் நேர்முகத் தேர்வில் ஆட்களை சேர்த்துக்கொள்கிறது.

- தங்களின் அமைப்பு ஏனைய கூட்டுறவு அமைப்புக்களை விட சற்று வித்தியாசமானது இது ஒரு சமூகத்தின் வாழ்வியலுடன் தொடர்புடையது என்பதால கூட்டுறவு பற்றி தங்களின் அபிப்பிராயம் அனுபவம் பற்றி கூறுங்கள்?

கூட்டுறவு அமைப்பினை போல நன்மையளிக்கும் அமைப்பு வேறு ஒன்றாக இருக்க முடியாது. சரியான வழியில் வழிப்படுத்த முடிந்தால் இந்த அமைப்பைக்கொண்டு பலவற்றை சாதிக்கலாம் எமது அங்கத்தவர்களும் தமது வாழ்க்கைக்கான பல வசதிகளுக்கு இவ் அமைப்பைப்பயன்படுத்தவேண்டும்.

- பேரிணைய அமைப்பு மூலம் தங்களின் அங்கத்தவருக்கு என்னவிதமான நன்மைகள் கிடைக்கிறது?

நான் ஒரு பேரிணைய பணிப்பாளர் விருத்து நிதி வசதியும் கட்டுப்பாட்டு விலை, யும் நிர்ணயிக்கப்படுகிறது. இது சமநிர்வாகத்தை ஏற்படுத்த உதவும் வருட விலை மாத விலை என்பனவும் சங்க பிரச்சினைகளுக்கான ஆலோசனையும் இதனால் கிடைக்கிறது.

## மாவட்ட மட்ட சான்றிதழ் பயிற்சித் திட்டம்!

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கமும் மாவட்ட கூட்டுறவுச் சபையும் இணைந்து நடாத்தி வரும் கிளை நிலையப் பணியாளருக்கான சான்றிதழ் பயிற்சி நெறி ஒன்று அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு காலப்பகுதியில் தொடர்ந்து 5முழுநாள்பயிற்சியின்பின்னர் பரீட்சை தேர்வு மூலம் சித்தியடைவோருக்கு சான்றிதழ் மாவட்ட மட்டத்தில் வழங்கும் திட்டத்தின் கீழ் இப்பயிலரங்கு கரைச்சி தெற்கில் நடைபெற்றுவருவதாக கல்வி அலுவலர் திரு. செ. பாலேந்திரன் தெரிவித்தார்.

இத்தொடரின் 3வது பயிலரங்கு05.04 98அன்று பொது சன உறவுச் சந்தை அபிவிருத்தியும் எனும் தொனியில் பின்வரும் தலைப்புகளின் கீழ் நிகழ்த்தப்பட்டது. அங்கத்தவரது விருப்பமும் கிளை நிலை முகாமைத்துவமும் பற்றியும், படிவம 9B, படிவம் 15, செயற்படுதிறன், விற்பனை அபிவிருத்தியும் சந்தைப் பங்கும், கிளைநிலைய செயற்பாட டில் படிவம 23A யின் பயன்பாடு என்பன தொடர்பில் கூட்டுறவுக் கல்லூரியின் விரிவுரையாளர்கள் கருத்து வழங்கினர்.

45 பணியாளர்கள் இத் திட்டத்தின்கீழ் பயிற்றப்படுவதாகவும்இது அவர்களின்பணி நிலைதடை தாண்டலுக்கான தகுதி சான்றாக கவனிக்கப்படவிருப்பதாகவும சங்க பொது முகாமையாளர் திரு. தி. கிருபாகரன்தெரிவித்தார் மாவட்டத்தின் முதன் நிலை சங்கமான கரைச்சி தெற்கு பணியாளர் கல்வி அபிவிருத்தியால வழிகாட்டல் பாட நெறிகளை அறிமுகப்படுத்தும் பொறுப்பில் இருப்பதாக அதன் தலைவர திரு. சி. சிவஞானம் இப்பயிலரங்கின் போது கருத்துத் தெரிவித்தார்.

கல்வி வேலைத்திட்ட இலக்கில் கரைச்சி தெற்கு ப.நோ கூ. சங்கம் அதிக அக்கறையுடன் ஈடுபட்டிருப்பது இவ் விடத்தில் குறிப்பிடத்தக்கது.

## கரைச்சி வடக்கில் விரைவில் போசாக்கு பயிலரங்கு

கரைச்சி, வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் போசாக்கு அபிவிருத்தி தொடர்பாக போசாக்குகருத்தரங்கொன்றை தமது தொழிற் பரப்பின் பல கிராமங்களில் செயல்படுத்தவுள்ளதாக தெரியவருகிறது. மாவட்டமட்டத்தில் போசாக்கு வள ஆளணியினருக்கெனத் திட்டமிடல் செயலகத்தினால்ஒழுங்கமைக்கப்பட்டிருந்த நட்ட இனம் காணலும் போசாக்கு வள ஆளணிப் பயிலரங்கில் மேற்படி சங்க கல்வி அலுவலர் திரு. திருவருட்தேவரால் கருத்து முன்வைக்கப்பட்டது. மாவட்ட கூட்டுறவுச் சபைகேட்போர்கூடத்தில் உதவிதிட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப் பயிலரங்கில் கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத்தியோகஸ்தர்கள் வள ஆளணியாக இனம் காணப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டதுடன் சங்கமட்டத்தில் போசாக்கு வேலைத்திட்டங்களை முன்வைக்குமாறும் வேண்டப்பட்டிருக்கிறது.

## கரைச்சி தெற்கில் சங்க மட்ட கருத்தரங்கு

வாகனப்பகுதியின் செயற்பாடு நிறுவன வளர்ச்சியில் மிகப்பிரதானமான ஒரு ஊடகம் நவீன விற்பனை உத்திகளில் இடமாற்றலின் துரித வேகம் பெரும் சாதனைகளுக்கு துணை புரியும் என வாகனப் பணியாளருக்கான சிறப்புப் பயிலரங்கை தொடக்கி வைத்த கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. சிவஞானம் கருத்துத் தெரிவித்தார் விசேட கவனத்துடன் வாகனப்பகுதியின் முகாமையை செயற்படுத்த கல்வி அறிவூட்டலும் அவசியமானது என்ற கருத்துடன் பொதுமுகாமையாளர் திரு.தி.கிருபாகரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் படிவம் 29, 30, 31 பயன்படுத்தும் முறையும் போக்குவரவு ஒழுங்கு விதிகளும் பற்றி கலந்துரையாடப்பட்டது. சங்கமட்டத்தில் கல்வி அலுவலரின் முயற்சியில் இப்பயிலரங்கு நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## யாழ்குடாவில் வீணாகும் பனங் கள்

யாழ்.குடாநாட்டில்உற்பத்தி செய்யப் படும் பெருந்தொகையான பனங் கள் பயன்படுத்த முடியாது கீழே ஊற்றப்படுகிறது இதனால் கள் உற்பத்தியாளரின் வருமானம் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிய வருகிறது.

வடிசாலைகள் சீராக இயங்காது உள்ளதாலும், பதப்படுத்தும் தொழிற்சாலை முற்றாக சேதமடைந்துள்ளதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது என தெரிகிறது. தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பில் இருந்த வடிசாலைகள் பல தற்போது அரசின் மதுவரித்திணைக்களத்தால் பொறுப்பேற்கப் பட்டுள்ளது தெரிந்ததே.

## தமிழர் புதுவருட விழா

புத்தாண்டு நிகழ்வுகளை கலாச்சார விழுமியத்துடன் பேணும் வகையில் கிளி ஊர்காவற்றுறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் 20. 4. 98 அன்று வெகுவிமர்சையாக கொண்டாடியது கிளிநொச்சி அரசாங்க அதிபர் முதன்மை விருந்தினரான கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளின் சிறப்பம்சமாக கூட்டுறவாளர்களின் கலை நிகழ்வுகளும், பாடல் பங்களிப்புகளும் இடம்பெற்றது. சங்கத்தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

# "மானிடம் போகும் வழி"
## - நாடக விமர்சன அரங்கு -

அத்தி பூத்தாற்போல் எப்போதாவது நடைபெறும் நாடக அரங்க முயற்சிகளிடையே இம் மாதம் ஆசிரிய சேவை முன் பயிற்சியை முடித்துக்கொண்ட மூன்றாவது தொகுதியினரின் நாடக முயற்சியான 'மானிடம் போகும் வழி' இன்றைய நாட்களின் சமூகத் தேவைகளின் வெளிப்பாடாக அமைந்த ஒரு அரங்க முயற்சி ஆகும்.

ஆசிரிய சேவை மூன் பயிற்சியின் நாடகக் களப்பயிற்சியின் வெளியீடாக அமைந்த இந்த நாடகம் இன்றைய களப்பயிற்சி முறையிலான 'FORUM THEATRE' வடிவத்தினூடாகவே உருவானது.

இந்த மண்ணின் வளங்களையும், பின் தங்கிய மாவட்டங்களுக்கான கோட்டாக்களின் வாய்ப்புகளையும் பயன்படுத்தி பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதியை பயன்படுத்தும் மாணவர்கள், கற்கை முடிந்தபின் அவலங்கள் நிறைந்த எமது பின் தங்கிய பிராந்தியங்களில் சேவையாற்றுவதற்கு மறுதலித்து விட்டு வளமான வாழ்வு தேடி ஓடுகின்ற அவலத்தை வெளிப்படுத்துவதே கதையின் கருவாக அமைந்திருக்கிறது.

தினம் தினம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தமது இயலாமையையும் மீறி சேவையாற்றுகின்ற விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிறிய தொகை வைத்திய அதிகாரிகளைத்தவிர ஏனையோர் தமது வளமான எதிர்கால வாழ்வை மற்றும் சுகபோகங்களை கருத்திற் கொண்டு தம் வாழ்வு வேர் கொண்டு இருந்த மண்ணை மறந்து ஓடுகின்ற அவலத்துக்கு ஓர் சாட்டை அடியாக இவ் அரங்க முயற்சி அமைகிறது.

குறுகிய காலம் மட்டுமே வழங்கப்பட்ட இவ் அரங்க முயற்சியில் முழுமையையும், முதிர்ச்சியையும் எதிர்பார்க்க முடியாவிட்டாலும், ஓரளவு செழுமையை எதிர்பார்த்திருந்தோம். பாத்திரத் தேர்வுகளில் பூரண திருப்தியை தெரிவிக்க முடியவில்லை. எனினும் ஆசிரிய பாத்திரம் ஏற்று நடித்த குருப்பிரியா மற்றும் அபராஜிதன், வஸ்ரின் ஆகியோருடைய பாத்திரப் பொருத்தப்பாட்டை பாராட்டாமல் இருக்கவும் முடியவில்லை.

அரங்கியல் அசைவுகளினூடான அழகியல்வெளிப்பாடு (ARTISTIC EXPRESSION) குறைவுபாடாக அமைந்ததனாலோ என்னவோ, சற்றுக் கனதியான வசனங்களினூடாகவே நாடகம் நகர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

'வந்திடுவேன் நாளை வந்திடுவேன் எங்கள் வைத்திய வித்தகன் வந்திடுவான்''
''பெற்ற தாயர் பெருமை இன்பம் கொள்ளுவாம் - பிள்ளை
கற்றுயர்ந்து அறிஞன் ஆன போதிலே'' ஆசிரியர் சா வே பஞ்சாட்சரம் அவர்களுடைய

-சஞ்சிகா-

கருத்து வளமான பாடல்கள் இந்த நாடகத்துக்கு இனிமை சேர்க்கின்றமை உணரப்பட்டது.

கம்பஸ் முடித்து ஊருக்கு வந்து வைத்திய சேவை செய்வான் என்ற நம்பிக்கை பொய்த்தபோதும், ஊருக்கு வந்து நான் என்ன புழுதியே குடிக்கிறது என அவன் மறுக்கிற போதும் துடித்துப்போகிறாள். அன்னை பெற்ற பிள்ளையானாலும், ஊருக்கு உதவாதவனை ஊரவருடன் சேர்த்து நிராகரிப்பதும் இந்த மண்ணில் வேரூன்றி இருந்து தன் படிப்பு முடிந்ததும் பகட்டான வாழ்வுக்காக வேறிடம்தேடும் இவர்களை உருவாக்கும் பல்கலைக்கழக கட்டிடங்களை உடைக்க வேண்டும்என உத்வேகம் ஊரவர்கள் கொள்ளும் போதும் உண்மையின் தாக்கங்கள் எங்கள் இதயங்களிலும் உறைக்கிறது.

மண்ணை விட்டோடும் மனங்களைத் திருத்துதல் அன்றி கட்டிடங்களை உடைத்தல் இப் பிரச்சினைக்கு தீர்வாகாது எனும் கருத்துடன் நிறைவு பெறும் இவ்வரங்க முயற்சி ஆசிரியர் மூன் பயிற்சி நிறைவு நாள் நிகழ்ச்சியாக அமைந்ததனால் நாடக ஆர்வலர் பலருக்கு பார்க்கும் சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. எனவே இதனை பெருகட்டி பல தரப்பட்ட இடங்களுக்கும் எடுத்துச்செல்ல வேண்டும் என்பது எமது வேண்டுகோள் ஆகும். இவ் அரங்க முயற்சியை வழிப்படுத்தி நெறிப்படுத்திய திரு விஜயசேகரன் பாராட்டுக்குரியவர்.

- ஒரு இலட்சம் பேருக்கு ஒரு டாக்குத்தர் எண்டால் எப்பிடி மருந்து கொடுக்கிறது .
- எங்கட ஊரிலை இருந்து டாக்குத்தருக்குப் படிக்க கம்பசுக்கு போனவங்கள் எங்கை போய்த்துலைஞ்சாங்கள்.
- தம்பி உன்னை எதிர்பார்த்து ஊரே விழாக்கோலம் கொண்டிருக்கு வாடா வா — —
- அம்மா உனக்கென்ன மண்டைப்பிசகே, அங்கை வந்து என்னை என்ன புழுதி குடிக்கச் சொல்லுறியே —
- இந்தப் புழுதியிலை துவண்டு வளர்ந்து தான் நீ படிச்சனி

# 'போரூட்' அனுசரணையுடன் ஆரம்ப ஆசிரிய பயிற்சி!

கிளி. மாவட்ட கல்வித் திணைக்களம் 'போரூட' நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பபிரிவில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஒன்பது நாள் வதிவிட ஆசிரிய முன்சேவைப பயிற்சியினை வழங்கியுள்ளது.

கரைச்சி மேற்கு, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 112 ஆசிரியர்கள் இப்பயிற்சியினால் பயனடைந்துள்ளனர்.

பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வில்கற்பித்தல் உபகரண கண்காட்சி கையெழுத்து சஞ்சிகை வெளியீடு, பயிற்சியாளரின் கலைநிகழ்வு என்பன இடம்பெற்றன. பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. குருகுலராஜா பிரதம விருந்தினராகவும், கிளி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் போரூட்திட்ட இணைப்பாளர் திரு மோகன் அந்தோனிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்

# இலைக்கஞ்சித் திட்டத்துக்கு பசும்பால் அன்பளிப்பு!

இலைக்கஞ்சித் திட்டத்தில் சுயமாகவே ஆர்வமுடன் பெற்றோரும் இணைந்துள்ளனர் இலைக்கஞ்சித் திட்டத்துக்கென தமது வீடுகளில் பசும்பால் சேகரித்து பாடசாலைக்கு வழங்கி வருகின்றனர்.

இம் முன் மாதிரி நடவடிக்கை கிளி - தருமபுரம் கோட்டம் கலவெட்டித்திடல் நாகேந்திர வித்தியாலயத்தில் நடைமுறையில் உள்ளது இலைக்கஞ்சியுடன் பசும் பாலும் சேர்ப்பதனால் சுவையும் போசாக்கும் அதிகரித்துள்ளதாக இதனை வந்து பார்த்த தமிழ் கல்விப் பணிப்பாளர் ஒருவர் மிகவும் பாராட்டியுள்ளார்.

இவ் இலைக்கஞ்சித் திட்டம் கரைச்சிவடக்கு ப.நோ. கூ. சங்கத்தினால் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(அ.அ)

# நெல் கொள்வனவில் கரைச்சி கிழக்கு முன்னணி

விவசாயிகளிடம் இருந்து நியாய விலையில் நெல் கொள்வனவு செய்வதில் கரைச்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் முன்னணியில் உள்ளதாக தெரிய வருகிறது. ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஒரு மில்லியன் ரூபா நெல் கொள்வனவுக்கென வழங்கப்பட்டிருந்த போதும் இது வரையில் கரைச்சி கிழக்கில் 5000 மூடை நெல் கொள்வனவு செய்துள்ளதாகவும் தொடர்ந்தும் கொள்வனவு இடம்பெறுவதாகவும், சங்க வட்டாரங்கள் தெரிவித்தன விவசாயிகளை அதிகளில் அங்கத்தவராக கொண்ட இச் சங்கம் மிக அண்மையில் தனித்து இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# கரைச்சி செயலர் பிரிவில் உருத்திரபுரம் சம்பியனானது

கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவுக்கான விளையாட்டுப் போட்டிகளில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் முழுச் சுற்றுப் போட்டிக்கான சம்பியனாகியது. ஸ்கந்தபுரம் டானியல் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிளி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் திரு. சிதம்பரநாதன் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் ப. நோ. கூ. சங்க தலைவர்கள் கலந்து கொண்டனர். கிளிநொச்சிக் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு. சு. சிறில் கரைச்சி தெற்குத் தலைவரும் கிளிமாவட்ட விளையாட்டு குழுவின் உப தலைவர்களில் ஒருவருமான திரு சி சிவஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றியீட்டிய கழகங்கள் வருமாறு கிரிக்கெட்:- உழவர் ஒன்றியம், எல்லே:- உழவர் ஒன்றியம், உதைபந்து:- உதயதாரகை விளையாட்டுக் கழகம் கரபந்து (ஆண்கள்) கிருஷ்ணபாரதி விளையாட்டுக்கழகம், கரபந்து (பெண்கள்) உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் - வலைபந்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம், மெய்வல்லுநர் (ஆண்கள்) - உழவர்ஒன்றியம், மெய்வல்லுநர் [பெண்கள்] உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம்.

# ஒவ்வொரு அன்னையும் தன் குழந்தையின் ஆசிரியையே!

கல்வி பயில பள்ளி செல்வதற்கு முன்பும் பள்ளி செல்வதற்கப் பயிற்சி பெறும் நேசறி மற்றும் கிண்டக்காடின் பாலர் பாடசாலை செல்வதற்கு முன்பும் குழந்தைகளுக்கு வீடு தான் பள்ளிக்கூடம். அன்னை தான் ஆசிரியர்

தாயைச் சார்ந்தே குழந்தை வளர்கிறது. எனவே தொடக்க காலங்களில் உடலாலும் உள்ளத்தாலும் குழந்தைக்கு வலுவூட்டும் ஆற்றலும் கடமையும் அம்மாவுக்கே உண்டு.

குளிப்பாட்டுவது, உடை போடுவது என்பன வற்றோடு அதன் மூளைவளர்ச்சிக்கும் தாய் துணை புரிய வேண்டும்

குழந்தைகளின் சின்னச் சின்ன நடவடிக்கைகள் மகிழ்த்த கொள்ளை ஆனந்தம் தரும் அவற்றில் மயங்கி மகிழ்வதுடன் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கும் தாய் வழிகாட்ட வேண்டும்.

உதாரணமாக ஒரு வயது குழந்தையிடம் பொருள்களை வேறுபடுத்தி அறியும் ஆற்றல்

> குழந்தைக்கு அதன் முதல் ஏழு ஆண்டுகளில் ஏற்படும் வளர்ச்சிப்பக்குவம் தான் அதன் ஆயுட் காலத்திற்குரிய பண்பு நலன்களை நிர்ணயிக்கிறது என குழந்தைகளின் உளவியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு குழந்தை நல்லவனாகவோ அன்றி தீயவனாகவோ மாறுவது இந்தக் காலகட்டத்தில் பெறக்கூடிய பயிற்சியை பொறுத்தே அமையும்.

பள்ளி செல்வதற்கு முன்னான இப் பருவமே குழந்தையின் குண இயல்புகளை சிறப்பாக்கும் பருவமாதலால் இப்பருவத்தில் தாயின் பொறுப்பு மிக மிக இன்றியமையாததாகிறது. குழந்தைக்கு உணவு ஊட்டுவது, கணிசமாக வளர்கிறது. இச்சமயத்தில் விதம் விதமான பொருள்களை குழந்தையிடம் காட்டி விளையாடலாம். இது விளையாட்டு என்ற பெயரில் பொருள்களை வேறுபடுத்தி அறியும் ஆற்றலை குழந்தையிடம் வளர்க்கலாம். (5ஆம்பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக உடற்பயிற்சி டிப்ளோமா-

யாழ். பல்கலைக்கழகத்தினால் உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருவருடப்பயிற்சி நெறியான இக் கற்கைக்கு க. பொ. த (உயர் தரத்தில்) மூன்று பாடங்களில் சித்தியும், மாவட்ட தேசிய மட்டத்தில் விளையாட்டு நிகழ்வில் வெற்றி பெற்றவர்களும். விண்ணப்பிக்கலாம், விண்ணப்பப்படிவங்களை பல்கலைக்கழகத்தில் பெற்று 30-5-98 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி யாழ் பல்கலைக்கழக கல்வித் திணைபின் சிரேட்ட உதவிப்பதிவாளர் அறிவித்துள்ளனர்

# அங்கத்தவனது விருப்பங்களும், கிளை நிலைய முகாமைத்துவமும்!

கூட்டுறவுச் சங்க அமைப்பு முறையில் அங்கத்தவன் என்ற தகுதிநிலை இந்த அமைப்பின் முதுகெலும்பு போன்ற தகுதியை வழங்கும் செயல்பாடு ஆகும். ஒற்றுமை, சிக்கனம், ஜனநாயகம், நாணயம், நியாயம், சுதந்திரம் என்ற அம்சங்களை தமது குணவியல்பாக இலங்காட்டும் ஒருவர் தான் கூட்டுறவுத் துறையில் அங்கத்தவனாக செயல்பட தகுதியுடையவர் ஆவர். இவர்கள் பொருத்தேவை கருதி மக்கள் என்ற வகையில் ஒன்று கூடும் போது ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் ஒத்துழைக்கும் செயற்பாடு தோற்றம் பெறுகின்றது. இந்த செயற்பாட்டை அவர்கள்

1. தடையற்ற உறுப்புரிமை
2. ஜனநாயக ஆளுகை
3. பங்குக்கு மட்டான வட்டி.
4. ஆதரவுக்கு ஏற்ற தள்ளுபடி
5. கூட்டுறவில் கூட்டுறவு
6. கூட்டுறவுக் கல்வி

என்ற தத்துவங்களுக்கூடாக செயற்படுத்துவதற்கென ஒன்றுக்கொன்று இணைந்து கொள்ளும்போது அது கூட்டுறவுத் துறை. அங்கத்தவனாக அவனை குறிப்படுத்தி கூட்டுறவு வாழ்க்கை முறை என்ற பொதுவுடைமையான சமுதாய உணர்வுகள் அவனை வழிப்படுத்துகின்றது. இந்த வாழ்வியல் முதலாளித்துவ போட்டி மிக்க இன்றைய கட்டத்தில் சமூகத்தின் நலனுக்காக தனிநலனை அர்ப்பணித்து வாழும் எண்ணப்பாட்டைத் தொடர காரணமாகின்றது. இந்த எண்ணப்பாங்கு தான் பெருமளவிலான சமூக விருப்பமாக மாற்றம்பெற அது கூட்டுறவு இயக்கமாக சகல மனிதசெயற்பாடுகளிலும் பரிமாணம் பெறுகின்றது. எனவே கூட்டுறவு இயக்கத்தின் அதிமுக்கியமான தகுநிலை அங்கத்துவம் என்பதாகும். நூறுரூபா முகப் பெறுமதியுடைய பணத்தினால் இது ஆக்கப்படுவதில்லை. இந்த நிலையில் கூட்டுறவு அங்கத்தவனது விருப்பங்கள் என்பது இவ் அமைப்பின் குறிக்கோளைத் தோற்றுவிக்கும். அடிப்படையான தளமாக செயற்படுகின்றது. இந்த குறிக்கோளின் தொகுதியே கூட்டுறவு நிறுவனமாக வெளிப்படுகிறது. இந்தக் குறிக்கோள்களை அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப அடைந்து கொள்வதற்கென பணித்தொகுதி ஒன்றைத் தெரிந்தெடுத்து அதனை முகாமை செய்வதனூடாக சிறந்த பலாபலன்களை அடைய முயற்சிக்கும் போதே நிறுவனங்களின் முகாமை [illegible] செயற்பாடும் இடம்பிடிக்கின்றது எனலாம். அங்கத்தவன் என்பவனது விருப்பமே நிறுவன இயக்கு சக்தியாக மாற்றம் பெறுவதனை நாம் காணலாம். இந்த அங்கத்தவர்கள் தமது நிர்வாகிப்புச் சுலபத்திற்காக தமது முகாமை அலகினை பல்வேறு கிளைகளாகவும் பிரித்துக்கொள்கின்றனர். இந்த பாகுபடுத்தப்பட்ட எல்லைப்பரப்பினுள் இருக்கும் அங்கத்தவர்கள் தமது பரப்பினுள் ஒரு கிளைப் பொதுச்சபையாகக் கூடுகின்றனர். இச்சபையிலிருந்து கிளைக் குழுக்களுக்கு தெரிவுப் பிரதிநிதித்துவம் நிகழ்கிறது.

இந்தக் கிளைப் பொதுச் சபையும், கிளைக்குழுவுமே அப் பகுதிக்கான குறிக்க சங்கமைப்பின் பிரதான அதிகார குழுவாகும். சங்கத்தைப் பொறுத்து இக்குழுவானது ஒரு விழிப்புக்குழுவாகும். இக்குழுவானது தம்மில் இருந்து பொதுச்சபைக்கென பிரதிநிதிகளை தெரிவுசெய்து கொள்ளும் போது அது அதிகாரமுள்ள சபையாக தோற்றம் பெறுகிறது. இச்சபையில் அங்கத்தவர்களின் [illegible] இருக்கின்ற அமையும், தலைமையும் செயற்படு சபையாக அதிகார அமைப்பலகாக உருவாக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் இது வரை நாம் ஒரு கூட்டுறவு அமைப்பின் அங்கத்தவனது முக்கியத்துவத்தை அமைப்பு ரீதியிலும், பண்பு ரீதியிலும் விளங்கிக்கொண்டோம். இனி நாம் கிளை நிலைய முகாமைத்துவம் என்பது பற்றி நோக்குவோம்.

கூட்டுறவு நிறுவனத்தில் கிளை நிலையங்கள் என்பன அங்கத்தவனது தேவை கருதிய சந்தைப்படுத்தல் மையங்களாகவே உருவாக்கப்படுகின்றன. என்பதால் கிளை நிலைய முகாமைத்துவம் என்பது அங்கத்தவனது விருப்பங்களை உச்சமாக அடைந்து கொள்வதற்கான சந்தை திட்டமிடலும் செயலாக்கமும் பற்றியது என வரையறை செய்யும் சந்தை திட்டமிடல் என்பது கிளை நிலைய முகாமையில் கடைப்பிடிக்க வேண்டிய மிகப் பிரதானமான கடமையாகும். இது பின்வரும் கடமைகளை உள்ளடக்கியிருக்கின்றது.

1. அங்கத்தவனது விருப்பம் பற்றி அறிதல்.
2. அவற்றை திருப்தி செய்யக்கூடிய பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்தல்
3. விலையிட்டு, கொள்வனவு விற்பனை செய்தல்
4. முடிவில் இலாபத்தை பெற்றுக் கொள்ளல்.

(6-ம் பக்கம் பார்க்க)

அ. கேதீஸ்வரன்
விரிவுரையாளர்,
கூட்டுறவுக்கற்கை கல்லூரி

# கூட்டுறவு அபிவிருத்தி வேண்டிநிற்கும் கல்விப்பணி

கூட்டுறவு ஓர் சமூக பொருளாதார அமைப்பாகும் இவ் அமைப்பின் நெறிப்படுத்தலுக்கும் வெற்றிக்கும் கூட்டுறவுக் கல்வி இன்றியமையாதது என்பதைக் கூட்டுறவாளர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தினர்களுக்கும் ஊழியர்களுக்கும் இக் கல்வி அவசியம் என்பது புதியதோர் கண்டுபிடிப்பு அல்ல. கூட்டுறவு இயக்கமானது தோற்றம்பெறுவதற்கு மூலகர்த்தாவாக இருந்த றொபேட்ஓவன் கூட கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளார். தொடர்ந்து அவரின் யோசனைகளைத் தழுவி கூட்டுறவு இயக்கமானது அமைப்பு ரீதியாக உருவம் பெறுவதற்கு அடிப்படையாக இருந்து செயற்பட்ட றொச்டேல் முன்னோடிகள் கூட தமது கொள்கைகளில் கூட்டுறவுக் கல்வி இடம்பெற்றுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறுவளர்ந்து வந்த கூட்டுறவு இயக்கத்தினை சர்வதேச ரீதியாக ஒருமுகப்படுத்தி வளர்த்தெடுக்கும் முகமாக 1895 ஆம் ஆண்டு உருவம் பெற்ற சர்வதேச கூட்டுறவு இணையம் 1937 ஆம் ஆண்டு வெளியிட்ட முதலாவது கூட்டுறவுக் கொள்கையிலும் 1966 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டு வெளியிடப்பட்ட கொள்கையிலும் கூட்டுறவுக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதனைக் கொண்டு கூட்டுறவுக் கல்வியின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து கொள்ளலாம்.

கூட்டுறவு நிறுவனங்கள் சேவையை மட்டும் வழங்கும் நிறுவனங்கள் அல்ல. இவ்வாறு சொல்லப்பட்டால் அவை தொடர்ந்து தமது பணிகளை மேற்கொள்ள இயலாதநிலை தோன்றும் இந்நிலையில் கூட்டுறவு நிறுவனங்கள் [illegible] பொருளாதார அமைப்புகளாகவும் செயற்பட வேண்டிய தேவை இன்றியமையாததாகவுள்ளது இந்நிலையில் இவ் அமைப்பின் நோக்கம். அதன் சிறப்பியல்புகள் என்பவற்றை உறுப்பினர்களும், ஊழியர்களும், கூட்டுறவாளர்களும், மக்களும் அறிந்து கொள்ளும் கூட்டுறவுக் கல்வி போதிக்கப்படல் வேண்டும். பேராசிரியர் காட்வில் [illegible] கூறும் கருத்துப்படி கூட்டுறவு நிறுவனங்கள் இரண்டு விதமாகச் செயற்படல் வேண்டும், அதாவது ஒன்று வியாபார நிறுவனமாகவும் மற்றையது சமூகாயத் தத்துவங்களையும் சமூகாயத்துக்குப் பணிபுரியும் நோக்கத்தையும் கொண்ட நிறுவனமாகவும் செயற்பட வேண்டும். எனவே இதனை நன்கு உணர உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் கூட்டுறவுக்கல்வி அவசியமாகும்

கூட்டுறவுக் கல்வியானது ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக அன்றி முழு சமுதாயமும் அறிந்து கொள்ளும் வகையில் செயல்படுத்துவதன்மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி அமைக்க வேண்டும். அனைவரும் இதில் இணைவதன் ஊடாக பலம் பொருந்திய ஒரு பொருளாதார சமூக கல்வி கலாச்சார அமைப்பாக இதனை மாற்ற முடியும்.

க. சிவகுமார்
செயலாளர்
கிளி / மாவட்ட கூ. சபை

# வெட்டுப்புள்ளி கணிப்பீடு விசனம் தருகிறது

''கிளிநொச்சி மாவட்டத்தின் பல்கலைக்கழகத் தெரிவு எண்ணிக்கை புலமைப்பரிசில் தெரிவு எண்ணிக்கை தொடர்பாக நியாயமான வெட்டுப்புள்ளி நிர்ணயிக்கப்படாதுள்ளது. தொடர்ந்து வருகிறது. இந்த அநீதியினை உரிய இடங்களுக்கு தெரியப்படுத்தி எமது மாவட்ட மாணவர்களுக்கு சனத்தொகை விகிதாசாரத்துக்கேற்ற தெரிவு எண்ணிக்கையாவதுகிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' இவ்வாறு கல்விமேம்பாட்டுபேரவையின் கிளிமாவட்டத் தலைவர் திரு. பொ. விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

1981ம் ஆண்டு இறுதியாக சனத்தொகை கணிப்பீடு இடம் பெற்றது. அந்த புள்ளி விபரங்களின் படியே இன்று வரை சனத்தொகை ஒதுக்கீடு இடம் பெறுகிறது ஆனால் இடப்பெயர்வாலும் இயற்கை அதிகரிப்பினாலும் மக்கள் தொகை எவ்வளவோ மாறிவிட்டது. இந்தநிலையை தடுக்கவும் தேசிய கொள்கையில் நியாயமான எண்ணிக்கை நிர்ணயிக்கப்படவும் மாற்றங்களை கோர வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டார். முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கும் இந்த நிலை புள்ளது குறிப்பிடத்தக்கது

# இருளில் இருந்து இரு கேள்விகள்...

1. கூட்டுறவு பணியாளர் ஒருவர் சங்கத்தில் தற்காலிக பதவியில் கடமையாற்றி தொடர்ந்து எவ்வளவு காலத்தின் பின் நிரந்தரபணியாளராக அமர்த்தப்பட வேண்டும், என்பது பற்றி?

எந்த ஒரு பணியாளரும் கடமைக்கு சேர்ந்து 6 மாதங்களுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றினால் அவர் நிரந்தர பணியாளராக்கப்பட வேண்டும். என்பது பொதுச்சட்டம் இது கூட்டுறவுச்சங்கப் பணியாளருக்கும் பொருந்தும்

2. கூட்டுறவுச் சங்க கணக்கமைப்பு முறையில் பற்றுவரவுக் குறிப்பேட்டின் பங்கு பற்றி?

கூட்டுறவுச் சங்கங்களின் ரொக்கக் கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ஏனைய கணக்கு பதிவு நடவடிக்கைகள் பற்றுவரவுக் குறிப்பேட்டின் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இப் பதிவுகள் எதுவித அங்கீகாரமும் இன்றி நினைத்த மாதிரி செயல்படுத்தப்படுவது அவதானிக்கப்படுகிறது. இது தவறு. ரொக்க நடவடிக்கைகள் போலவே இந்த நடவடிக்கைகள் சகலதிற்கும் உறுதிச் சீட்டுகள் தயாரிக்கப்பட்டு உரிய பின்னிணைப்புக்கள் இடம்பெற்று தயாரித்தவர், சரிபார்த்தவர், கணக்காளர் பொதுமுகாமையாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலின் பின்பே இப்பதிவு நாளேட்டில் பதிவுசெய்யப்பட வேண்டும்

நடைமுறையில் உள்ள விசாரணைகள் சம்பந்தப்பட்ட கேள்விகள் தவிர்ந்த ஏனைய கூட்டுறவுப் பிரச்சினைகளுக்கான வினாக்களுக்கு விடை தரப்படும். எழுதியனுப்புங்கள்

''இருளில் இருந்து இரு கேள்விகள்''
சங்கமம்
ஸ்கந்தபுரம்

# செய்தியாளர் பயிலுனர்கள்

''சங்கமம்'' பத்திரிகையின் செய்தியாளர் பயிற்சி பெற விரும்புவோர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். கூட்டுறவு பணியாளருக்கு (கல்வி உத்தியோகத்தர்) முன்னுரிமை வழங்கப்படும்.

ஆசிரியர்,
சங்கமம்,
ஸ்கந்தபுரம்.

# ஒவ்வொரு அன்னையும்

பெரு முயற்சியுடன் சின்னச் சின்ன வார்த்தைகளை உச்சரிக்கும் பருவம் இது தான் இந்நேரத்தில் புதிய வார்த்தைகளைக் கற்றுக்கொள்வதுடன் அவற்றை திருத்தமாக உச்சரிக்கவும் விளையாட்டாக காட்டிக் கொடுக்கலாம்.

சண்டைபோடுதல், பயங்கரமான வார்த்தைகளைப் பிரயோகித்தல், அழுதல், அடித்தல் போன்றவை குழந்தைகளின் மனதில் பேதலிப்பை பண்ணும் எனவே இவ்வாறான சூழ்நிலை இல்லாதபடி பார்த்துக் கொள்ளுதல் தாயின் முக்கிய கடமையாகும்.

'ஒற்றைச் சொல் ஒரு வார்த்தை' என்ற நிலையில் இருந்து இரண்டு மூன்று சொற்கள் கொண்ட வாக்கியங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும். இதற்கு 'நிலா நிலா வா, வா ...' போன்ற பாடல்கள் பெரும் உதவியாக அமையும். அத்தோடு படங்களை அல்லது பொருள்களை காட்டி அவற்றின் பெயர்களை பிள்ளைகள் சொல்லும்படி செய்யலாம். இது மிகுந்த பயனைத்தரும். குழந்தைகள் புதிய வார்த்தைகளை கற்று கொள்கின்றனர் என இதனை நினைத்து விடக்கூடாது வார்த்தைகள் சொல்லுவதன் மூலம் குழந்தைகள் மறைமுகமாக நினைவாற்றலை வளர்த்துக்கொள்ளுகின்றனர் என்பதே உண்மை ஆகும்.

பாடசாலையில் சேர்வதற்கு முன் கடமை உணர்வுள்ள ஓர் அன்னை தரும் இந்த முறைசாராக்கல்வியை எந்தவொரு பள்ளியோ, பல்கலைக்கழகமோ தரமுடியாது

(ஆ-ர்)

- ஆசிரியர் குழு -
அ. கேதீஸ்வரன்
அ. அன்ரன் அன்பழகன்
ம. ஜெகநாதன்

சங்கமம்
SANGAMAM

ஆறு 1 அருவி 8
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. ஏப்ரல் 1998

# ஆள் சேர்ப்பு

கூட்டுறவுச் சேவையின் ஆட்சேர்ப்பு என்பது சங்கத்தினது பணிப்பாளர் சபைக்குட்பட்ட அதிகாரச் செயற்பாடாகும். இது தொடர்பில் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சில நிபந்தனைகளை கொண்டிருந்த போதும் அது இயக்குனர் சபை அதிகார வரம்புக்கு உட்பட்டதாகவே காணப்படுகிறது என்பதால் ஆட்சேர்ப்பு என்பது எப்போதும் சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகிறது.

இந்த அதிகாரக் கையளிப்பை திறமையாகக் கையாண்டு கூட்டுறவு நிறுவனங்கள் தமது தொழில் துறைகளை தமது செயற்படும் சூழலுக்கேற்ப நடாத்துவதற்கான யதார்த்த பூர்வ சலுகையளிப்பாகவே இது கருதப்படுகிறது. எனினும் பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களின் ஆட்சேர்ப்பு என்பது தமது சுயநலன்களை சாதிப்பதற்காகவும், தமது பரம்பரை உருத்தாக்[illegible]ற்காகவும் செயற்படுத்தப்படுவதாக பல[illegible]படுகின்றனர்.

ஒவ்வொரு செயற்பாட்டுக் காலத்திற்கும் அனுமதிக்கப்பட்ட முகாமை மட்டங்கள் தமது பதவிக்காலத்தின் போது தம்முடையோரை தெரிவு செய்தல் நியாயபூர்வ செயற்பாடு என்ற நிலை இப்போது நிகழ்ந்து விட்டது. உண்மையில் இப்படிப்பட்ட உறவு பேணுகை எமது சமூகத்தில் மிகச் சிறந்த பண்பாக உலகளாவிய சமூகங்களினால் பெரிதுபடுத்தி சிலாகிக்கும் ஒரு அம்சமாகும். இதுதான் எமது சமூகம் உலகளாவிய நாடுகளில் எல்லாம் இடம்பிடித்து செழிப்படைவதற்கான இழுவை விசை என்றாலும் தொழில் நிறுவனங்களை பொறுத்து இந்த நிலை அச்சம் தரக்கூடிய ஒரு நடவடிக்கையாகும். முகாமைக்கு மட்டும் சொந்தமுடைய ஒரு தனிச்சொத்தாக கூட்டு மூலதனத்தால் உருவாக்கப்பட்டு முதலாளித்துவத்துக்கெதிராக முன்வைக்கப்பட்ட கூட்டுடமை அமைப்பு மாறுவது மிக மிக ஆபத்தான ஒரு நிகழ்வாகும். அரசின் கொள்கைகளின் தெளிவின்மையால் பெருமளவு கல்வி கற்றோர் நிர்க்கதியாக தெருவுக்கு வரும்போது ஆறுதலளிக்கும் ஒரு தொழில் நிலையமாக இக்கூட்டுறவு அமைப்பை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நிலைமையோ எமது இரத்த உருத்துக்களுக்கும் பின் பற்றுவோருக்கும் என மட்டுப்பட்டு கட்டுப்பட்டு போவதனை தொடர்ந்து அனுமதிப்பதா? என்பதே கேள்வியாகும்.

மிக அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவு ஒன்றியத்தின் வருகைக்கு பின்னர் மாவட்ட மட்ட ஆளணி தெரிவுக்கென பணி நிலைவங்கி ஒன்றை நிறுவியது. விண்ணப்பங்களை கோரியது. நம்பிக்கை என்பது வேலையற்றோரிடம் நிரம்பிக்கிடந்தது. கூட்டுறவுக்கற்கைகளால சாதாரண / உயர்தர கல்வி பெற்று தகைமையடைந்தோர் பெருமூச்சை நிறுத்திக் கொண்டனர். என்ன ஆச்சரியம்! மெதுமெதுவாக இப்போது ஆட்சேர்ப்பு வங்கிக்கு சம்மந்தமில்லாது நியமனம் நிகழத்தொடங்கியுள்ளது. கூடித் தீர்மானித்தார்கள்; கோசமிட்டார்கள்; மாறிவிட்டார்களா? என்பது தான் கேள்வியாகும். எது எப்படியெனினும் செல்வாக்கால் நுழைந்த ஊழியப் படை என்பது எப்போமே வால்பிடிக்கும் பணித்தொகுதியாக நிறுவனத்தில் இருக்கும் என்பது நியமமாகும். நமது சமூகப்பணி வெளிச்சத்துக்கு வர மறுக்கிறது என்ற விசனம் தீர தமது ஒரு சில செயல்பாடுதான் காரணம் என்பதனை உணருவோம், துணிவோம் செயற்படுவோம்.

# கிளிநொச்சியில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு துரித முயற்சி

கிளிநொச்சி மாவட்டத்துக்கென ஒரு தொழில் நுட்பக் கல்லூரியினை அமைப்பது தொடர்பாக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்விக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிற் பயிற்சி நிலையத்தின் பயிற்சி நெறி தொடர்பாக மாவட்ட கல்விப் பணிப்பாளர் உதவி அரச அதிபர்கள் [illegible] நிறுவனம் இணையம்; [illegible] பணிப்பாளர் ஆகியோரை கொண்ட குழுவில் போருட் இளைஞர் சேவை மன்றம் ஆகியவற்றையும் இணைத்து நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படவேண்டும் எனஇக் குழுக் கூட்ட உறுப்பினர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் நான்கு மாவட்டங்களிலும் இப் பயிற்சி நிலையம் எதுவும் இதுவரை செயற்படவில்லை எனபதும் பாடசாலையில் இருந்து இடை விலகும் மாணவர்கள் அதிகமுள்ள இம் மாவட்டங்களில் இப் பயிற்சி நிறுவனம் மிக அவசியமானதாகும் என்பது குறிப்பிடத்தக்கது இது தொடர்பில் புதிய கட்டடமொன்றை பொருண்மிய மதியுரையகம் அமைத்து வருகிறது.

# தபாலகத்தைஇடம் மாற்றல்

குஞ்சுப்பரந்தன் பகுதிக்கான தபாலகத்தை அதன் அண்மிய பகுதியான நீவில் பகுதியில் செயற்பட வைக்க வேண்டுமென இப்பகுதி மக்களினால் நீண் காலமாக கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இடப்பெயர்வு காரணமாக இத் தபால்சேவை சீரற்றுள்ளதாகவும் எல்லையோர கிராமமாக இப்போது இது இருப்பினும் பெருமளவு மக்கள் இக் கிராமங்களில் குடியிருப்பதுடன் பெருமளவு நிர்வாக மையங்கள் இங்கு செயற்படுவதனையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இத்தபாலகத்தின் செயற்பாட்டுக்கென கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் கட்டடமொன்றை அமைத்து [illegible] இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கத்துவனது

வற்றை நாம் விரிவாக நோக்கும் போது அங்கத்தவன் என்பவன் வாடிக்கையாளர் என்ற அந்தஸ்தை பெற்றுக்கொள்வதற்குரிய அடிப்படையான செயற்பாடாக அவனது விருப்பம் பற்றிய அறிகை செயற்படுகின்றது. உற்பத்தியாளனாகவோ; நுகர்வோனாகவே அவர் செயற்படும் போ எமது நிறுவனத்தில் வாடிக்கையாளனாக பேணப்படும் போது அவனது நிறுவன உணர்வை மீள நினைவூட்ட சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அவனது விருப்பைப் பிரதிபலிக்கும் செயற்பாடு மூலம் இணைத்து கொள்ளும் ஆற்றலை ஊக்கப்படுத்துகிறது. அது போல அங்கத்தவர்கள் பொருட்களை வாங்க வரும் போதும், விற்க வரும்போதும் அதனூடாக திருப்தியை நாடியே இணைவதற்கு ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தனது திருப்திக்கேற்பவே விலை செலுத்தத்தயாராக இருக்கிறான். விலைகளின் மீது அவர்களுக்கு இருக்கும் அக்கறையை விடவும் திருப்தியின் மீதே அதிகம் அக்கறை கொள்கின்றனர். விலையிடலும், கொள்வனவு, விற்பனை செய்தலும் என்பது கிளை நிலைய நடவடிக்கைகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக இருக்கும். பொருட்களை கொள்வனவு, விற்பனை செய்யும் நிலையமாயின் அது உரியநேரத்தில் திறக்கப்பட்டு மூடப்படுதல், திறக்கப்படாத தினம் பற்றிய அறிவிப்பை திறந்திருக்கும் போதே தெரியப்படுத்தல். பொருட்களை காட்சிக்கும் புலப்படக்கூடிய வகையில் வைத்திருத்தல். பொருள் தரம் பற்றி அக்கறையுடன் இருத்தல். கழிவுகள், எச்சங்கள் என்பன பொருட்களில் உள்ளதா என்பதனை கிளை திறக்கும் போதே கவனித்துக் கொள்ளல். மூடும் போது நிறுவனத்தைப் பார்த்து விட்டு மூடுதல் கேட்போருக்குரிய பதிலை உரிய முறையில் வழங்கல். போன்ற நடத்தைகளை கிளை முகாமைத்துவம் கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ளல் அவசியமாகும். இதன் மூலம் நுகர்வோர் நடத்தையுடன் நிறுவன நடத்தையை இணைப்புச் செய்ய முடியும்.

நுகர்வோரைப் பொறுத்த பின்வரும் விடயங்கள் அக்கறைக்குரியதாக ஒரு கிளை நிலையம் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

1. நேரமுகாமைத்துவம்
2. சுத்தம்
3. கவர்ச்சிகரமான ஒழுங்கமைப்பு
4. தேவைக்கான எல்லாப் பொருட்களும் கிடைக்கக்கூடியதாக இருத்தல்
5. நவீனத்துவத்துக்கேற்ற நிலை
6. விலை பேதுப்படுத்தலற்ற நிலை
7. பாரபட்சமற்ற விநியோக ஒழுங்கு
8. இலகுபடுத்தப்பட்ட கொள்வனவு
9. மனிதப் பண்புகளுடனான உறவு நிலை

என்பவற்றை குறிப்பிட முடியும். அடுத்து நாம் வாடிக்கையாளன் பற்றிய அண்மைக்கால முகாமைத்துவக் கருத்துக்களில் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்தில் விற்பனைத் துறைசார்ந்தோருக்கான கருத்துக்களை மட்டும் சுருக்கமாக நோக்குவோம்.

## விசுவாசத்தைக் கொண்ட வாடிக்கையாளன்

நவீன முகாமைத்துவக் கருத்துக்கள் விசுவாசத்தின் அடிப்படையில் நிறுவனங்களில் பங்கு கொள்ளும் வாடிக்கையாளர்களே முக்கியத்துவம் வாய்ந்தவை என வலியுறுத்துகின்றன. விசுவாசத்தை பேணுதல் என்பது சில வாடிக்கையாளரின் விழுமியமாகவே உள்ளது. அப்படிப்பட்ட வாடிக்கையாளர்களையே ஒரு வியாபார நிறுவனம் சரியான வாடிக்கையாளராக இனம் கண்டு கொள்ளவேண்டும். கூட்டுறவு துறையினை பொறுத்து அங்கத்தவன் விசுவாசமுடைய வாடிக்கையாளன் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் விசுவாச வாடிக்கையாளரின் தன்மை பற்றி ஆராயும் போது ஓர் சொந்த அபிப்பிராயத்தோடு வாங்குபவர்கள் விளம்பரத்தின் அடிப்படையில் வாங்குபவர்களினது விசுவாசத்தை விடவும் கூடுதலான விசுவாசமுடையவர்களாக இருப்பர். சமூகத்தில் உள்ள மக்களின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு விசுவாசத்தை நோக்கின் அதிகளவில் அசைவியக்கமுறும் மக்கள் அடிப்படையில் விசுவாசமுடையவரா[illegible] ஏனெனில் அவர்கள் நுகர்வுறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது உறவுகளை குழப்பமடையச் செய்து கொண்டிருப்பர். நிரந்தர வீடுகளைக் கொண்டோர், நடுத்தர வயதுடையோர், கிராமங்களைச் சார்ந்த மக்கள் என்போர் எப்போதுமே அதிக விசுவாசமுடையவராக இருப்பர். இதனை விடவும் அங்கத்துவர்கள் என்போர் நம்பிக்கைக்குரிய விசுவாசிகளாக இருப்பர் என்பதால் தொடர்சியாக நன்கு திட்டமிடப்பட்ட வகையில் பேணப்படும் அங்கத்துவ வாடிக்கையாளர் உறவு நிறுவனத்தை எப்போதுமே நம்பிக்கைக்குரிய வியாபார மட்டத்தில் வைத்திருக்கும் வாடிக்கையாளரை இனங்காணும் முறையாகவே விலையிடல் பயன்படுத்தும் முறைக்கு பதிலாக விசுவாசத்தை அடிப்படையாகக்கொண்ட வாடிக்கையாளரை இனம் காணும் முறையே பெரிதும் விருப்பத்துக்குரியதாக கம்பனி அமைப்புக்களில் இப்போது பயன்படுத்தப்படுகின்றது நெருக்கமாக்கப்படும் விசுவாச வாடிக்கையாளனை தனித்துவம் வாய்ந்த துண்டமாக [illegible]ணப்படுத்தி அவர்களின் விருப்புக்களை முன்னுரிமைப்படுத்துவதும் துண்டமாக்கப்பட்ட உறவை உணரச் செய்வதும் அவசியமானதெனக் கருதப்படுகின்றது.

இதுவரையில் கூட்டுறவுச் சந்தைப்படுத்தலின் பிரதான இலக்கு சந்தைப்படுத்தலாக அங்கத்தவனை இனங்கண்டு அவனது விருப்பங்களுக்கு முன்னுரிமையளித்து விசுவாசத்தை கொண்ட வாடிக்கையாளனாக அவனை பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்தோம். இந்த தொழில் நுட்பம் எமது விற்பனை திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப்பத்திரிகை
துணுக்காய் தாசன்பதிப்பகத்தில் ஏப்ரல் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.